முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1584

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

30.01.2024, செவ்வாய்கிழமை

1. ஓங்காரக்குடில் படைத்த ஐயனே
   ஓங்கார ஞான ஒளி ஏற்றுகின்ற
   ஓங்காரன் என் அவதார நாயகனே
   உயர் ஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானுமே ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் தை மாதம் 16 ம் நாள், 30.01.2024, செவ்வாய்கிழமை)
   உரைத்திடுவேன் அரங்கன் உன் சக்தி பெருகவேண்டி
   வகைபட கலியுகத்தில் அரங்க ஞானி
   வரங்களே மக்களுக்கு பாதுகாப்பாக
3. அறமோடு கூடிய அறனாக அனைத்து ஆற்றலாக
   அகிலமதில் பேரிடரை பிரச்சினையான பல சிக்கல்களை
   வருமுலகில் அகற்றிக் காக்கும்
   வல்லமையாக வஜ்ராயுதமாக விளங்கக்கூடும்
4. ஆகவே உலகோர் அரங்கன் திருவடி பற்றி
   ஐயா முருகா அரங்கா என
   வகைபட வேண்டித் தொடர்ந்து வந்தால்
   வையகத்தில் பாதுகாப்பு உறுதி உறுதி
5. உறுதி தந்து அரங்கன் பேரிலே
   உயர்வான தர்மத்தை கலியுக மக்கள் கையில் எடுத்து
   கருதி வந்து அரங்கன் ஆசியோடு
   கட்டாயம் தர்ம சேவை புரிந்தால்
6. புரிந்தால் உலகிலே புண்ணியவான்களாக
   புகழ்மிக்க அரங்கனின் சீடர்களாக
   மண்ணுலகில் ஆறுமுகன் என் ஆசியோடு
   மாதவசியாகவும் மண்ணுலகையே மாற்றும் மகா சக்தியாகவும் மாற நேரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–